காரணத்தால் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். இது ஒரு நல்ல கேள்வி. ஓர் அமைச்சராக, நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவருக்கே எந்த விகிதாச்சாரத்தில், எந்த அடிப்படையில் உருவாக்க வேண்டும் என்று தெரியவில்லை. அதற்காகத்தான், மாண்புமிகு முதல்வர் அவர்கள் வேளாண்மைக்கு தனி பட்ஜெட் என்று அறிவித்தார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய நோக்கம் இப்போது நிறைவேறியிருக்கிறது. தற்போது, மக்களின் பார்வை வேளாண் துறையின் பக்கம் திரும்பியிருக்கிறது. அரசாங்கத்தினுடைய கவனிப்பு, நேரடி பார்வை இதில் இருக்கிறது. எனவே, வேளாண்மைக்கு தனி பட்ஜெட் என்ற அறிவிப்பு, முழுமை பெறுகின்ற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அது குழந்தையாகப் பிறந்து, தற்போது வளர்கின்ற குழந்தையாக இருக்கிறது.

விவசாயிகள் அதிகமாக உற்பத்தி செய்த விளைபொருட்களை அருகிலிருக்கின்ற விற்பனைக் கூடங்களில் விற்க வேண்டும்; நல்ல விலையும் கிடைக்க வேண்டும்; இடைத்தரகர்கள் இல்லாமல் நேரடியாக விற்பனையாளர்களும், உற்பத்தியாளர்களும் ஒருங்கிணைந்து போட்டி அடிப்படையில் கேள்விகள் கேட்டு, விவசாயிகள் உற்பத்தி செய்த பொருட்களுக்கு உரிய விலை கிடைப்பதற்கு விற்பனைக் கூடங்கள் பயன்படுகின்றன. அந்த வகையில், விதிகளின்படி ஒரு ஏக்கர் நிலம் வேண்டும். அதற்குரிய கட்டட வசதி வேண்டும். அரசாங்கத்தின் உரிய அனுமதி பெற வேண்டும். அத்தகைய வாய்ப்புகள் இருக்கும்போது இது உருவாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 132, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

132—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

***874—மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழ்ப்பெண்ணாத்தூர் தொகுதி, வேட்டவலம் பேரூராட்சிக்கு ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2022 ஏப்ரல் 20]

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

வேட்டவலம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விரைவில் அந்தப் பணி துவங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி (பேரவைத் துணைத் தலைவர்): *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேட்டவலம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பாரதிதாசன் தெரு மற்றும் நடுத்தெருவிற்கு ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியும், அந்தப் பேரூராட்சியில் துணை கிராமங்களாக உள்ள நடுத்திட்டு, வடக்குவெளி மற்றும் பிடாரம்கொட்டாய் ஆகிய பகுதிகளுக்கு 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் தேவை என்ற கோரிக்கை அங்குள்ள மக்களிடம் இருந்து கொண்டிருக்கிறது. நகரமயமாதலைத் தொடர்ந்து, தற்போது பேரூராட்சிகளில் அதிக மக்கள் குடியேறி வருகிறார்கள். தற்போது, அங்கே, 30,000–க்கும் மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். ஆனால், அவர்களுக்கு போதிய அளவில் குடிநீர் கொடுக்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. மாநகராட்சிகள், நகராட்சிகள், ஊராட்சிகள் போன்றவை கவனிக்கப்படுகின்றன. ஆனால், மாநிலம் முழுவதும் உள்ள பேரூராட்சிகள் தாயில்லாத பிள்ளைகளாக இருக்கின்றன. ஆகவே, பேரூராட்சிகள்மீது தனிக் கவனம் செலுத்தி, குடிநீர்த் தொட்டிகளை அமைத்துத் தர வேண்டுமென கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 ஆண்டு காலத்தில் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மூலமாக பல்வேறு பகுதிகளில், பேரூராட்சிப் பகுதிகளில் பணிகள் ஓரளவுதான் நடைபெற்று வந்தன. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, பேரூராட்சிகளுக்கென தனியாக 450 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்து, அடிப்படை வசதிகளை*

செய்து தருமாறு கூறியதைத் தொடர்ந்து, கடந்த ஆண்டு முதல் கிட்டத்தட்ட அனைத்துப் பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சில பணிகள் முடிவடைந்திருக்கின்றன; சில பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இந்த முறை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் பேசியபோது, 490 பேரூராட்சிகளிலும், எங்கெங்கு குடிநீர்ப் பஞ்சம் இருக்கிறதோ, அவற்றிற்கு, எங்கெங்கு குடிநீர் ஆதாரம் இருக்கிறதோ, அங்கிருந்து குடிநீர் எடுத்துச் சென்று குடிநீர் வழங்க வேண்டும் என்ற உத்தரவைத் தந்திருக்கிறார்கள். நான்கு ஆண்டுகளாகப் பிரித்து, முதற்கட்டமாக, முக்கியமாக, தேவையிருக்கிற 130 பேரூராட்சிகளைத் தேர்வு செய்து, அந்த 130 பேரூராட்சிகளிலும் முழுமையாக குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். எனவே, அதனடிப்படையிலே ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற இருக்கின்றன.

முற்பகல் 10–35

மாண்புமிகு உறுப்பினர், துணை சபாநாயகர் திரு. பிச்சாண்டி அவர்கள் கேட்டிருக்கின்ற வேட்டவலம் பேரூராட்சியில் தற்போது 17,378 மக்கள்தொகை இருக்கிறது. நாளொன்றுக்கு 1.22 MLD தண்ணீர் கொடுக்க வேண்டியிருக்கிறது. அதிலே, குடிநீர் வடிகால் வாரியம்மூலம் 0.6 MLD–ம், உள்ளூரிலிருந்து தண்ணீர் எடுப்பதிலே 0.62 MLD–ம், ஆக 1.22 MLD தண்ணீர் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். எனவே, இந்தப் பேரூராட்சியில், அவர் கேட்டிருக்கின்ற இடங்களில் முழுமையாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டு விரைவிலே அங்கிருக்கின்ற மக்களின் குடிநீர் பஞ்சத்தைத் தீர்க்கின்ற வகையிலே பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரகண்டநல்லூரிலிருந்து விழுப்புரம் மாவட்டம், தென்பெண்ணையாற்றுக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் வேட்டவலத்திற்கு தண்ணீர் வருகிறது. துணை கிராமங்களாக

2022 ஏப்ரல் 20]

இருக்கின்ற மற்ற கிராமங்களுக்கெல்லாம் அந்தத் தண்ணீர் செல்வதில்லை. வேட்டவலம் பேரூராட்சிக்கு மட்டும் கிடைத்துக் கொண்டிருக்கிறது. அடிக்கடி மின் தடை ஏற்படுகின்றது என்கின்ற காரணத்தினால், தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியிலே வேட்டவலத்திலேயிருந்து நேரடியாக மின்சாரத்தை வழங்கி தண்ணீர் முழு நேரமும் வந்து கொண்டிருந்தது. இப்போது அங்கே broad gauge railway line *அமைக்கப்பட்டபோது அதிலே போடப்பட்ட* cable*-கள் அகற்றப்பட்டன; மீண்டும் அந்த* cable*-கள் போடப்படாமல் இருக்கின்றன.*

விழுப்புரம் மாவட்டம், திருவண்ணாமலை மாவட்டம் என இரண்டு மாவட்டங்கள் இதில் சம்பந்தப்பட்டுள்ளன. இதுபோன்ற பல கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், செங்கம் போன்ற பகுதிகள் குறித்தெல்லாம் இரண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்களும் உட்கார்ந்து பேசி, பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தால்தான் இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை வெற்றிகரமாக நடத்த முடியும். ஆனால், அந்தத் துறையில் இருக்கக்கூடியவர்கள் பல முறை சொல்லியும் எடுத்த cable*-ஐ போடாமல், இரண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்களும் சேர்ந்து கூட்டங்கள் நடத்தாத காரணத்தினால் அங்கு குடிநீர் வராத ஒரு நிலை இருக்கின்றது. குறிப்பாக,* broad gauge *அமைந்துள்ள நாயனூர் என்ற* railway crossing*-ல் சிறிது தூரம்தான்* cable *போடவேண்டும்;* cable*-ஐ வாங்கித் தருவதற்கு எங்கள் மாவட்டத்தில் தயாராகயிருக்கிறார்கள்; ஆனால், அந்த மாவட்டத்தில் நடவடிக்கை இல்லை. ஆகவே, மாதந்தோறும் இரண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்களும் பல்வேறு கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் குறித்து கூட்டுக் கூட்டங்களை நடத்தி, குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளோடு கலந்தாலோசித்து பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தால்தான் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் சிறப்பாகச் செயல்படும். இதனை அரசு மேற்கொள்ளுமா எனக் கேட்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் வடிகால் வாரியம்மூலம் புதிதாகப் போடப்பட்டிருக்கின்ற குழாய்கள் சரியாக இருக்கின்றன. 30 ஆண்டுகள், 40 ஆண்டுகள் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கின்ற குழாய்கள் சில இடங்களில் பழுதாகின்றன. அதைச் சரி*

செய்வதற்குத்தான் தமிழ்நாடு முழுவதும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஒப்பந்ததாரர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைக் குறிப்பெடுத்து, இன்றே குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளோடு கலந்துபேசி, அவர்கள் அந்தப் பணியை முடித்துத் தரச் சொல்லிவிடுகிறோம்.

அதேநேரத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திருவண்ணாமலை மாவட்டத்திற்கும், வேலூர் மாவட்டத்தில் உள்ள ஒரு பகுதிக்கும் காவேரியை குடிநீர் ஆதாரமாகக் கொண்டு 9,660 கோடி ரூபாய் செலவிலே புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அது ஆய்விலே இருக்கிறது. விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. திட்ட அறிக்கையும் வந்திருக்கிறது. விரைவிலே அதற்கான ஒப்புதலைப் பெற்று அந்தத் திட்டத்தைத் தொடங்குவதற்குரிய முயற்சிகளை எடுத்திருக்கிறோம். எனவே, வேட்டவலம் மட்டுமல்ல, திருவண்ணாமலை மாவட்டத்திற்குத் தேவைப்படும் முழு கொள்ளளவு தண்ணீரையும் வழங்குவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. மரகதம் குமரவேல் அவர்கள்.

திருமதி கு. மரகதம் குமரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது மதுராந்தகம் தொகுதிக்குட்பட்ட அச்சரப்பாக்கம் பேரூராட்சியில் 15,000–க்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். தண்ணீர் பற்றாக்குறை இருப்பதனால், அங்கு நாளொன்றுக்கு குறைந்த அளவு தண்ணீரே கிடைக்கின்றது. எனவே, தண்ணீர்ப் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்காக அச்சரப்பாக்கம் பேரூராட்சியில் ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

2022 ஏப்ரல் 20]

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அந்தப் பகுதியை ஆய்வு செய்து, தேவைப்படின் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு நிச்சயமாக மக்களுக்கு சமச்சீராக தண்ணீர் வழங்கப்படும். ஓர் இடத்திலே தண்ணீர் அதிகமாகவும், ஓர் இடத்திலே தண்ணீர் குறைவாகவும் இல்லாமல், சமச்சீராக தண்ணீரை கொடுக்கச் சொல்லி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். எனவே, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்படுவது அவசியம். இந்த வருடம், 130 பேரூராட்சிகளிலும் அதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே, தங்களுடைய பேரூராட்சியிலும் அந்தப் பணி நடைபெறுவதற்கு ஆவன செய்யப்படும்.*

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா அவர்கள்.*

டாக்டர் வை. முத்துராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை நகராட்சி, காமராஜபுரம் பகுதியில் சுமார், 20,000 பேர் வசித்து வருகின்றார்கள். இந்தப் பகுதி சற்று மேடான பகுதியாகும். இந்தப் பகுதியில் நிலவும் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க, 5 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை கூட்டுக் குடிநீர்த் திட்டம் காவேரியிலிருந்து செல்கின்றது. இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு, நீண்டகாலமாக, 30 ஆண்டுகளுக்கும் மேலாக அங்கே தண்ணீர் சென்று கொண்டிருக்கின்றது. அங்கே நிறைய குழாய்கள் பழுதடைந்துள்ளதால், அதனுடைய முழு கொள்ளளவையும் கொண்டு சேர்க்க முடியவில்லை. அதனால்தான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த முறை, விராலிமலை வழியாக புதுக்கோட்டை நகரத்திற்கும், விராலிமலையில் உள்ள சில*

[*2022 ஏப்ரல் 20*

பகுதிகளுக்கும் சேர்த்து, புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்றை அறிவித்திருக்கின்றார்கள். எனவே, புதுக்கோட்டை நகராட்சியிலுள்ள அந்த மேடான பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு, அங்கு சமச்சீரான தண்ணீர் வழங்குவதற்குரிய பணிகள் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்லூர் கே. ராஜூ அவர்கள்.*

திரு. செல்லூர் கே. ராஜூ: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரில் 100 வார்டுகள் இருக்கின்றன. அந்த 100 வார்டுகளுக்கும் முல்லைப் பெரியாறு அணை திட்டத்தின்மூலம், 50 ஆண்டுகளுக்கு குடிநீர்ப் பிரச்சினை இல்லையென்ற ஒரு தீர்வை உருவாக்குகின்ற வகையில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால், ரூ.1,296 கோடி மதிப்பீட்டில், அம்ருத் திட்டத்தின்கீழ் பணிகள் எடுக்கப்பட்டு, நடைபெற்று வந்தன. ஆனால், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைப்பது, குழாய்கள் பதிக்கின்ற பணிகள் மற்றும் சுத்திகரிப்பு செய்கின்ற பணிகள் போன்றவை தற்சமயம் நிறுத்தப்பட்டிருக்கின்றன. 2023-க்குள் அந்தத் திட்டம் நிறைவேற வேண்டும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், விரைவாக, அந்தத் திட்டத்தை முடிப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா? 2023 ஆம் ஆண்டுக்குள் முடித்துக் கொடுப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்ற திட்டம், ஏற்கெனவே நடைமுறையில் இருந்து கொண்டிருக்கின்றது. அதற்கான பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தற்போது பணிகள் நிறுத்தப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதனுடைய ஒப்பந்ததாரர்களின் நிலை என்னவென்பது தெரியவில்லை. எனவே, அதை ஆராய்ந்து, தொடர்ந்து, 2023 ஆம் ஆண்டுக்குள் அந்தப் பணிகளை முடிப்பதற்கு நிச்சயம் அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2022 ஏப்ரல் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் நா. எழிலன் அவர்கள்.*

டாக்டர் நா. எழிலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்திருக்கக்கூடிய ஆயிரம் விளக்குப் பகுதியில், புலியூர் மழைநீர்க் கால்வாய் 1.6 கிலோ மீட்டர் நீளமுள்ளது. இது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மேயராக இருந்தபோது உருவாக்கப்பட்ட கால்வாயாகும். தற்போது, அந்த மழைநீர்க் கால்வாயில், கழிவுநீர்க் கால்வாய் இணைப்புகள் அதிகமாக உள்ளன. சிங்காரச் சென்னையின் ஒரு பகுதியாக, அந்த மழைநீர்க் கால்வாய் புதுப்பிக்கப்படுமா என்ற கேள்வியைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு பெய்த அதிக மழையின் காரணமாக, பெருநகர சென்னை மாநகராட்சி பெருவெள்ளத்தால் பாதிக்கப்பட்டது. உடனடியாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அதற்கென்று ஒரு தனிக் குழுவை அமைத்து, எந்தெந்தப் பகுதியில், என்னென்ன பணிகள் நடைபெற வேண்டுமென்பதைக் கண்டறிந்து, முதற்கட்டமாக, 396 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, அதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்று காலையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பணிகள் நடைபெறுவதை நேரடியாகச் சென்று பார்த்தார்கள். அந்தப் பணிகளையெல்லாம் விரைவாக முடிக்க வேண்டுமென்று சொல்லிவிட்டுத்தான் இன்று சபைக்கே வந்திருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டது சம்பந்தமாக, நானும் அவரோடு சென்று பார்த்தேன். மாம்பலம் கால்வாயைப்போல, தொடர்ந்து கழிவுநீரெல்லாம் அதிலே கலக்காமல், தனியாகக் குழாய் அமைத்து,* underground drainage *மூலமாக மறுசுத்திகரிப்பு செய்யக்கூடிய பணி ஆய்விலே இருக்கின்றது. அந்த ஆய்வு முடிந்தால், நிச்சயமாக, அந்தக் கழிவுநீர் ஓடையிலே கலக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ஜெயக்குமார் அவர்கள்.*

திரு. S. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பெருந்துறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கொடிவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம், அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களுடைய ஆட்சியில், 242 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துவக்கப்பட்டது. கடந்த பட்ஜெட் கூட்டத் தொடரின்போது, அதற்கான பணிகள் அக்டோபர் மாதத்திற்குள் முடிக்கப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருந்தார்கள். அந்தப் பணி விரைவில் முடிக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–45

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானே, அங்கு நேரடியாகச் சென்று, அந்தத் திட்டத்தைப் பார்த்தேன். சாலைகளின் ஓரத்திலே பைப்புகள் அமைக்கப்படுவதிலே தாமதம் ஏற்பட்டது. சாலைகளையும் போட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அந்தப் பணிகள் முடிவடைந்து, விரைவாக அந்தத் திட்டம் செயலாக்கத்திற்குக் கொண்டு வரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன் அவர்கள்.

திரு. தா. உதயசூரியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989 ஆம் ஆண்டு சின்னசேலம், கள்ளக்குறிச்சிக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் வேண்டுமென்று ஐயா கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருக்கும்போது கோரிக்கை வைக்கப்பட்டது. படிப்படியாக நாட்கள் கடந்து, நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு தளபதி அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருக்கின்றபோதுதான் அந்தத் திட்டப் பணி முடிவடைகின்ற நிலை உருவாக்கப்பட்டது. மின்சாரம் தடைபடுகின்றபோது, ஏழு கிணறுகள் வெட்டப்பட்டதன்மூலம், முறையாக நன்னீர் கொடுக்கப்படுகின்ற சூழ்நிலை இருக்கின்றது. லாலாப்பேட்டை பகுதி, வனப் பகுதியாக இருப்பதனால், அங்கு மின்சார இணைப்புக்கு தடையிருந்த காரணத்தினால், மாண்புமிகு

2022 ஏப்ரல் 20]

உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் செஞ்சிக்கு வருகை தந்தபோது அவர்களிடம் கோரிக்கை வைத்தேன். அப்போது separate feeder line *கொடுப்பதற்கும், 5* generator*–களை கொடுப்பதற்கும் வழிவகை செய்தார்கள். ஆனால், இப்போது 5, 6 நாட்களுக்கு ஒருமுறைதான் கள்ளக்குறிச்சி, சின்னசேலம் பகுதிகளுக்கு நன்னீர் கொடுக்கின்ற நிகழ்வுகள் நடைபெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு குறிப்பிட்ட காலமாகத்தான் குடிநீர் வடிகால் வாரியம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள்; உண்மைதான். ஆகவே, அதிகாரிகளை முடுக்கிவிட்டு, ஆய்வு செய்து ஓரிரு நாட்களுக்குள் நன்னீர் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழிவகை செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் இருக்கிற மின் மோட்டார்கள் கணக்கிடப்பட்டன. எந்த மின் மோட்டார்களெல்லாம் 100 சதவிகிதம் சரியாக இருக்கின்றன; பழுதுபட்டிருக்கிற மின் மோட்டார்களை எங்கெல்லாம் மாற்ற வேண்டுமென்று கணக்கெடுத்து, தமிழ்நாடு முழுவதும் 60–க்கும் மேற்பட்ட இடங்களில் இருக்கிற மோட்டார்களை மாற்றுவதற்கு முடிவெடுத்து, அதற்கான அரசாணையை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார். எனவே, மோட்டார்கள் பழுதுபட்டிருக்கிற நேரத்தில் தண்ணீர் முழுமையாக வந்து சேரவில்லை. அனைத்தையும் சரி செய்வதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. உதயசூரியன் அவர்கள் சொன்னதையும் கணக்கிலே எடுத்து, அதுகுறித்து உடனடியாக அரசு அதிகாரிகளுக்கு எடுத்துச் சொல்லி, விரைவிலே முழுமையாக உங்களுக்கு தண்ணீர் கொடுப்பதற்கான பணியை நிச்சயமாக செய்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 136, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.*